# புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,659 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்



**புதுக்கோட்டை,ஜன.13-**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளக்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், இல்லம் தேடி கல்வித் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 395 மாணாக்கர்களுக்கும், குழிப்பிறை மேல்நிலைப் பள்ளியில் 342 மாணாக்கர்களுக்கும், சடையம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 346 மாணாக்கர்களுக்கும், பொன். புதுப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 576 மாணாக்கர்களுக்கும், என ஆகமொத்தம் 1,659 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் இன்றைய தினம் வழங்கப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணாக்கர்கள் அனைவரும் இதனை நாள்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்தி தங்களது உடல்நலத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், மாவட்ட கல்வி அலுவலர் முனைவர்.ஆரோக்கியராஜ், பள்ளித்துணை ஆய்வாளர் குருமாரிமுத்து, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம் மற்றும் கணேசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பொங்கலை சிறப்பாக கொண்டாடிட குடும்பஅட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக்கரும்புடன் ரொக்கத்தொகை ரூ.3000 வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின்

## திருவாரூர் மாவட்டத்தில் பயனடைந்தோர் நெஞ்சார்ந்த நன்றி



**திருவாரூர்,ஜன.13-**

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மக்களை தேடி நலத்திட்டங்களை வழங்கி, அவர்களின் வாழ்க்கையில் வசந்தத்தை உருவாக்கி வருகிறது. அதுமட்டுமில்லாமல் மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை அறிந்து, அதை காலத்தில் நிறைவேற்றி வருகிறது. அரசு பொறுப்பேற்றவுடன் மக்களை தேடி மருத்துவம், பெண்களுக்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயணம், புதுமை பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், நமக்கு நாமே திட்டம், கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை என பல்வேறு மக்கள் நலன் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் பொது விநியோகத்திட்டத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்கள் தரமானவையாகவும், நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுநீளக் கரும்புடன் ரொக்கத் தொகை ரூ.3000/- (ரூபாய்



மூன்றாயிரம் மட்டும்) அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, அரசாணை (2டி) எண்.51, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(டி1) த்துறை நாள்: 31-12-2025 மற்றும் அரசாணை (2டி) எண் 1 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (ட்டி.1) த்துறை நாள்- 05.01.2026 திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 3,95,453 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் செயல்படும் 800 (596 முழுநேர நியாய விலைக் கடைகளும் மற்றும் 204 பகுதிநேர நியாய விலைக் கடைகளும்) நியாயவிலைக்கடைகள் வாயிலாக பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு 2026 - விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

இவ்வகையில், திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 3,95,453 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக்கரும்பு, ரொக்கம் ரூ.3000/- (மூவாயிரம்), விலையில்லா வேட்டி மற்றும் சேலை பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பச்சரிசி மற்றும் சர்க்கரை சம்பந்தப்பட்ட நியாயவிலைக்கடைகளுக்கு ஏற்கனவே நகர்வு செய்யப்பட்டுள்ளது. கரும்பு திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து நியாயவிலைக்கடைகளுக்கும் நகர்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பின் கீழ் பயனடைந்த திருவாரூர் பகுதியினை சேர்ந்த நளினி கூறுகையில்..

நான் கூலி வேலை செய்து, அதில் கிடைக்ககூடிய வருமானத்தை கொண்டு எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். இந்நிலையில் பொங்கல் பண்டிக்கையினை எவ்வாறு குழந்தைகளுடன் கொண்டாடுவது என நினைத்து வருத்தப்பட்டிருந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக்கரும்புடன் ரொக்கத்தொகை ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கி எங்களை போன்ற மக்கள் பொங்கல் பண்டிகையை மிகச்சிறப்பாக கொண்டாடுவதற்கு வழிவகையை செய்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் தேவர்கண்டநல்லூர் கிராமத்தை சேர்ந்த அம்பிகா கூறுகையில்,



நான் தேவர்கண்டநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர். நான் சுயதொழில் செய்து வருகிறேன். எனது தேவைகளை நிறைவேற்றி வருகிறேன். இந்த ஆண்டு பொங்கலை எவ்வாறு கொண்டாடுவது, என்போன்ற சாதாரண மக்கள் பொங்கல் திருநாளை கொண்டாட வழிவகை இல்லாத நிலை உள்ளதே என வருத்தப்பட்டு கொண்டிருந்தேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக்கரும்புடன் ரொக்கத்தொகை ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டது. எங்களைப் போன்ற சாதாரண மக்களின் நிலையை கருத்தில் கொண்டு நாங்களும் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்ற எண்ணத்தில் இத்திட்டதை செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.



**தொகுப்பு:**
**மீ.செல்வகுமார்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருவாரூர் மாவட்டம்**

# திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வே.சரவணன் தலைமையில் நடைபெற்றது



**திருச்சி,ஜன.13-**

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வே.சரவணன், தலைமையில் (12.01.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்றுகள், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு தொடர்பான மனுக்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வேண்டி மனுக்கள், முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, விபத்து நிவாரணத்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை மற்றும் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைகள் பெறுவது தொடர்பான மனுக்கள், தெருவிளக்கு, தண்ணீர் இணைப்பு குழாய், தொகுப்பு வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டுவது தொடர்பான மனுக்கள், கல்வி உதவித்தொகை, வங்கி கடன், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள், தையல் இயந்திரம், சலவைப்பெட்டி வேண்டி விண்ணப்ப மனுக்கள் மேலும் ஓய்வூதிய பயன், தொழிலாளர் நல வாரியம் தொடர்பான மனுக்கள், வேலை வாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 323 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

திருச்சிராப் பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்று திருப்பூரில் மாநில அளவில் நடைபெறும் வினாடி வினா போட்டியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை கலெக்டர் வே.சரவணன் வழங்கினார்.

இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, துணை கலெக்டர் (பயிற்சி) உ.பாரூக் , சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை கலெக்டர் இலக்கியா, மாவட்ட பழங்குடியின நல அலுவலர் ரங்கராஜன், தனித் துணை கலெக்டர் (நிலம் எடுப்பு) நெடுஞ்சாலை சரவணன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணத்தில் இந்து மக்கள் கட்சி சார்பில் பொங்கல் விழா



**சுவாமிமலை,ஜன.13-**

கும்பகோணத்தில் இந்து மக்கள் கட்சி, இந்து தர்ம சேவா அறக்கட்டளை ஆகிய இயக்கங்கள் இணைந்து நடத்திய பொங்கல் விழா பானுபுரீஸ்வரர் கோவில் அருகே இந்து மக்கள் கட்சி மாநில பொதுச் செயலாளர் குருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு பாரதிய ஜனதா கட்சி முன்னாள் மாவட்ட தலைவர் சதீஷ்குமார், மாவட்ட பொருளாளர் வேதம் முரளி, மாவட்ட சிந்தனை பிரிவு அமைப்பாளர் வாசன் வெங்கட்ராமன், இந்து மக்கள் கட்சி துணைத் தலைவர் பாலா, மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் கணேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக இந்து மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத், ரோட்டரி சங்கத்தின் முன்னாள் ஆளுநர் பாலாஜி, ஆடிட்டர் கிரி, இளைஞர் பஜனை சமாஜம் சுவாமிநாதன், தமிழ்நாடு பிராமண சங்க நிர்வாகி ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்து மக்கள் கட்சி நிர்வாகிகள் ஹரிஷ் நைனா, அஜய் அப்பு, இந்து தர்ம சேவா அறக்கட்டளை நிர்வாகிகள் ராஜேஷ், சுரேஷ், கார்த்திக், குமரேசன், மனோஜ் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் பொங்கல் விழாவிற்கான ஏற்பாடு செய்திருந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது

**தஞ்சாவூர்,ஜன.13-**



தஞ்சாவூர் மாவட்டம் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 362 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் வழங்கினார்கள். இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், உத்தரவிட்டார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஸ்ரீதர், சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை கலெக்டர் சௌமியா மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,ஜன.13-**

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் (12.01.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே சென்று கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட கலெக்டர் , முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள், கடந்த வாரங்களில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஒரு மாதத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாத மனுக்களின் விவரங்களையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டு மனைப்பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்றவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடிப்படை வசதிகள் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 267 மனுக்களை பொதுமக்களிடமிருந்து கலெக்டர் உள்ளிட்ட அலுவலர்கள் பெற்றுக்கொண்டனர்.

இன்றைய கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு அரசு மானியத்துடன் தலா ரூ.25,936 மதிப்பில் மின் மோட்டார் பொருத்திய புல் நறுக்கும் இயந்திரங்களையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வேப்பூர் வட்டாரம், ஆண்டிக்குரும்பலூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் மதுரா மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் சாவித்திரி என்பவருக்கு மாதாந்திர வாடகை அடிப்படையில் AGEY (Ajeevika Grameen Express Yojana) திட்டத்தின் கீழ் ரூ. 8,00,000/- லட்சம் மதிப்பிலான TATA ACE வாகனத்தையும் கலெக்டர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.பேபி நிர்மல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வாசுதேவன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் சிவக்கொழுந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திட்ட இயக்குநர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சக்திவேல் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா

## எம்பி, எம்எல்ஏ துவக்கி வைத்தனர்



**திருவாரூர்,ஜன.13-**

வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் திராவிட பொங்கல் 2026 என்ற பெயரில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான ஆண்கள், பெண்களுக்கான மாபெரும் விளையாட்டு திருவிழா நடத்த திமுக கழகத் தலைவரும்,தமிழக முதல்வரும் உத்தரவிட்டுள்ளார்.அந்த வகையில் நகர, ஒன்றிய சார்பில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று மாவட்ட போட்டிகளுக்கு தேர்வு பெற்றவர்களுக்கான திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் நேற்று திருவாரூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் துவங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினரும்,மாவட்ட கழகச் செயலாளருமான பூண்டி கே கலைவாணன்,நாகை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் துவங்கி வைத்தனர். போட்டியில் வெற்றி பெற்று பரிசு பெறுபவர்கள் மாநில அளவில் நடைப்பெறவுள்ள போட்டியில் கலந்து கொள்ள உள்ளார்கள். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள நகர, ஒன்றிய அணிகள் கலந்து கொண்டனர். கோ கோ,கபடி, வாலிபால்,கூடைப்பந்து,கிரிக்கெட் போட்டிகள் நடைப்பெறுகின்றன.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜா,ஒன்றிய கழகச் செயலாளர்கள் புலிவலம் தேவா, பாலச்சந்தர்,சேகர் கலியபெருமாள்,நகர கழக செயலாளர் வாரை பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் கலைவேந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் செந்தில்,தியாகபாரி மற்றும் மகளிரணி,சுற்றுசூழல் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு அணி,இலக்கிய அணி,தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,ஜன.13-**

நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்;; மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் ப.ஆகாஷ், தலைமையில் (12.01.2026) நடைபெற்றது.

வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன், உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 154 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டையினையும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் தற்காலிக தூய்மை பணியாளராக பணிபுரியும் 12 பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய அடையாள அட்டையினையும் கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.ப¬¬வணந்தி, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கோ.அரங்கநாதன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கே.கார்த்திகேயன், தாட்கோ மாவட்ட மேலாளர் சக்திவேல் கலியபெருமாள் மற்றும்அரசு அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் படித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிப்பெற்ற 8 நபர்கள்

## கலெக்டர் பொ.ரத்தினசாமியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்



**அரியலூர்,ஜன.13-**

அரியலூர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் 38 மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலம் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகளில் ஆண்டுதோறும் பல்வேறு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும், இப்பயிற்சி வகுப்புகளின் மூலம், அதிக அளவிலான மாணவ, மாணவியரகள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசு வேலைவாய்ப்பினைப் பெற்று வருகின்றனர். அந்த வகையில் மாவட்ட மைய நூலகத்தில் படித்து 2025-2026 ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிப்பெற்று உள்ளாட்சி நிதி தணிக்கை, வேளாண்மைத் துறை, நீதித்துறை, வணிகவரித்துறை, கால்நடைபராமரிப்பு, காவல் துறை உள்ளிட்ட துறைகளில் பணியாற்றவுள்ள 08 நபர்கள் இன்றையதினம் கலெக்டர் பொ.இரத்தினசாமி, அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இதேபோன்று TNPSC தேர்வில் வெற்றிப்பெற்ற செல்வி. இரா.வனிதா என்பவர் தெரிவிக்கையில், நான் மாவட்ட மைய நூலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் போட்டித் தேர்வுகளுக்காக படித்து தேர்ச்சி பெற்று வேளாண்மைத் துறையில் இளநிலை உதவியாளர் பணியிடத்தை தேர்வு செய்துள்ளேன். மாவட்ட மைய நூலகத்தில் போட்டித்தேர்வர்களுக்கு இலவச இணைய வசதி (Wifi), போட்டித்தேர்வர்களுக்கு படிப்பதற்கு தனி அறைகள் என பல்வேறு வசதிகளை வழங்கினார்கள்.இந்நிகழ்வில், மாவட்ட நூலக அலுவலர் வேல்முருகன், அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வில் வெற்றிப் பெற்றவர்கள், இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within THREE Months thereafter I, SANTHOSH V S/o.Vijayakumar S Aged 25 years Permanently residing at, 4/76, Srinivasan Colony, Palaniyandi Nagar, Palanganatham Ariyallur- 621 651 Tamilnadu. Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-603 104. Those who have any valid Objections may notify the same to the Bar Council within 10 days.

SANTHOSH V

**காணவில்லை**

எனது தாயார் திருமதி. விமலா அவர்கள் பெயரில் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண எண் 1118/1981 கடந்த 05-01-2025 அன்று வடகாரவயலில் இருந்து மன்னார்குடி வரும் வழியில் பேருந்தில் கீழே விழுந்து காணாமல் போய்விட்டது. தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி அசல் கிரய பத்திரத்தை கண்டு எடுத்தவர்கள் கீழே கண்ட முகவரியில் என்னிடம் ஒப்படைக்குமாறும் அல்லது தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

சுதாகர், த/பெ. ரெகுபதி, 26/11, பாரதிதாசன் நகர்,
ஹரித்திராநதி மேல்கரை,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். செல் : 9345687408

**அறிவிப்பு**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கோயம்பள்ளி, செல்லிபாளையம் தெற்கு தெரு, கதவு எண்.5/61 என்ற முகவரியில் வசித்து வரும் லேட். வெள்ளையன் (எ) கருப்பண்ணகவுண்டர் அவர்கள் மகன் சுப்பன் க (ஆதார் எண்.3663 8640 6935) ஆகிய என் கட்சிக்காரர் கொடுத்த தகவலின் பேரில் கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில்,

மேற்படி சுப்பன் தந்தை "வெள்ளையன் (எ) கருப்பண்ண கவுண்டர், த/பெ.லேட்.தாண்டவன் என்பவர் கடந்த 02.08.1981 தேதியன்று மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்துவிட்டார். அவரது இறப்பினை பதிவு செய்ய கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான 10 நாட்களுக்குள் தொடர்புடைய கரூர் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அலுவலகத்தில் தெரிவிக்க அறிவிப்பு செய்யப்படுகிறது.

A.Muhamed Yusuf B.A.,B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்,
எண்.77, கோவை ரோடு, கனரா வங்கி அருகில், கரூர்.
செல் 94433 38397

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

சீனிவாசன்,
த/பெ.நடராஜன்,
கீழவீதி,
தலைஞாயிறு கிராமம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் "தையல்நாயகி" க/பெ. நடராஜன் என்பவர் இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் கடந்த 10.04.1989 மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யகோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாசியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருகேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம்.

சீனிவாசன், மனுதாரர்,
மயிலாடுதுறை மாவட்டம்.

**மண்ணச்சநல்லூர் பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

15–வது நிதி ஆணைய மான்யம் (காற்றின் தரம் மேம்படுத்துதல்)
(Urban Agglomeration) 2025-2026
ஒப்பந்தப்புள்ளிகோரும் அறிவிக்கை.

ந.க.எண். 790/2025/அ நாள்: 06.01.2026

| | |
|---|---|
| 1. ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி, முகவரி : | திருமதி.இரா.கிருஷ்ணவேணி, செயல் அலுவலர், மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 2. வேலையின் விபரம் | (see below) |
| இ. பணி அல்லது கொள்முதல் நடைபெறும் இடம் : | மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 3. எந்த இடத்தில் எந்த தேதி வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விபரம் | ஒப்பந்தப்புள்ளி படிவம் கீழ்க்கண்ட இணையதளத்தில் 23.01.2026 பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in/ |
| 4. செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை விபரம் | (see below) EMD should be paid upto 23.01.2026 3.00 pm |
| 5. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும் | 23.01.2026 வெள்ளிக் கிழமை அன்று 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யலாம். |
| 6. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் இடமும் நாளும் நேரமும் | 23.01.2026 வெள்ளிக் கிழமை அன்று 3.30 மணிக்கு இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்படும். |
| 7. ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை தனியே குறிப்பிடப்பட்டுள்ளது. அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். |

2. வேலையின் விபரம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | மண்ணச்சநல்லூர் பேரூராட்சி வார்டு எண்.9 புதுச் செட்டித் தெருவில் தார்சாலை அமைத்தல் | 28.21 |

4. செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை விபரம்

| வ. எண் | வேலையின் பெயர் | முன் வைப்புத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | மண்ணச்சநல்லூர் பேரூராட்சி வார்டு எண்.9 புதுச் செட்டித் தெருவில் தார்சாலை அமைத்தல் | 56420 |

EMD should be paid upto 23.01.2026 3.00 pm

(ஒம்) ஆ.சிவசண்முககுமார்,
தலைவர்,
மண்ணச்சநல்லூர் பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(ஒம்) இரா.கிருஷ்ணவேணி,
செயல் அலுவலர்,
மண்ணச்சநல்லூர் பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.09/செ.ம.தொ.அ/திருச்சிராப்பள்ளி. நாள்: 12.01.2026.

# மயிலாடுதுறையில் கிராம வேளாண் பணிப்பயிற்சி மாணவர்கள் விவசாயப் புல ஆய்வு



**மயிலாடுதுறை,ஜன.13-**

மயிலாடுதுறை மாவட்டத்தில் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை, தஞ்சாவூரில் பயிலும் கிராம வேளாண் பணிப்பயிற்சி ஆர் ஏடபிள்யூ மாணவர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர் ஏஹச்ஓ ராம் ப்ரேம் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மயிலாடுதுறை வட்டம், தருமபுரம் பகுதியில் உள்ள இரண்டு விவசாயப் புலங்களை பார்வையிட்டனர்.

முதலில், பாலகுரு அவர்களின் விவசாய நிலத்தை மாணவர்கள் பார்வையிட்டனர். அவர் சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் வாழை, மாமரம் மற்றும் கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்து வரும் முன்னோடி பெரிய விவசாயியாக உள்ளார். பயிர் மேலாண்மை, சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலை நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, . ராமலிங்கம் அவர்களின் விவசாய நிலத்தை மாணவர்கள் பார்வையிட்டனர். அவர் பல்வேறு வகையான கீரைகள் மற்றும் காய்கறிகளை சாகுபடி செய்து வருவதுடன், சந்தை தேவைக்கு ஏற்ப பயிர் தேர்வு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இந்தப் புலப் பார்வையின் மூலம் மாணவர்கள் தோட்டக்கலை தொடர்பான நடைமுறை அறிவையும், விவசாயிகளின் அனுபவ அடிப்படையிலான தொழில் நுட்பங்களையும் நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

# கரூர் மாவட்டத்தில் ரூ 7.52 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் எம்.எல்.ஏ. வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்



**கரூர்,ஜன.13-**

கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி , (12.01.2026) மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், தலைமையில், கரூர் மாநகராட்சி மற்றும் கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.52 கோடி மதிப்பீட்டில் 9 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும் மற்றும் 18 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

அந்த வகையில் இன்றைய தினம், கரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் கரூர் மாநகராட்சியில் வார்டு எண்.36, 42, 44, மற்றும் 47 அங்கன்வாடி மையம், புதிய சிறு சமுதாய கூடம் மற்றும் அங்கன்வாடி மையக் கட்டிடத்தில் பழுதுகளை சரிபார்த்தல் பணி என மொத்தம் ரூ.60.45 இலட்சம் மதிப்பீட்டில் 5 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைத்தும்,

வார்டு எண்.36,37,38,42, மற்றும்44 ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்குழாய் கிணறு, புதிய நியாய விலைக்கடை, புதிய நிழற்குடை மற்றும் பகுதி நேர நியாய விலை கடை ரூ.39.55 இலட்சம் மதிப்பீட்டில் 7 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை திறந்து வைத்தும்,

கரூர் ஊராட்சி ஒன்றியக் குட்பட்ட பகுதிகளில் ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் கிராம அறிவுசார் மைய கட்டிடம் ரூ.70.44 இலட்சம் மதிப்பீட்டிலும், புஞ்சை கடம்பங்குறிச்சி ஊராட்சி சின்னவரப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் ரூ.6.66 இலட்சம் மதிப்பீட்டில் இரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணிகளையும்,

கடம்பங்குறிச்சியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும், வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி பசுபதிபாளையம் நாயக்கர் தெருவில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளையும், வாங்கல் குப்புச்சி பாளையம் ஊராட்சி வாங்கல் ஸ்ரீனிவாசபுரம் ராஜேந்திரன் வீடு முதல் செந்தில்குமார் வீடு வரை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளையும்,

வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி வாங்கல் முதலியார் மயானம் சுற்றுசுவர் ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகளையும், வாங்கல் பண்டாரம் மயானம் சுற்றுச்சுவர் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகளையும், குப்புச்சிப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் ரூ.11.18 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள சாலையினை மேம்படுத்துதல் பணிகளையும்,

வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி ஓடையூரில் புதிய மினி சமுதாயக் கூடம் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகளையும், வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி கொங்கு நகர் பிரபு வீடு முதல் நடேசன் வீடு வரை ரூ.9.85 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளையும்,

மாரிகவுண்டன்பாளையம் மண்மங்கலம் - வாங்கல் சாலை வரை ரூ.233.00 இலட்சம் மதிப்பீட்டில் இடைவழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் அமைக்கும் பணிகளையும், வள்ளியப்பாளையம் மண்மங்கலம் - வாங்கல் சாலை வரை ரூ.238.00 இலட்சம் மதிப்பீட்டில் இடைவழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்து பெட்டிபாலம் அமைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைத்தும்,

புஞ்சை கடம்பங்குறிச்சி ஊராட்சி பெரிய வரப்பாளையம் ஏடி தெருவில் மணிகண்டன் வீடு முதல் குணா வீடு வரை ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணிகளையும், வாங்கல் ஊராட்சி மன்ற அருகில் கிளை நூலகத்திற்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடத்தினை திறந்து வைத்தும் என மொத்தம் ரூ.7.52 கோடி மதிப்பீட்டில் 27 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல்ராஜ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மாநகராட்சி மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் கே.எம். சுதா, மண்டலக்குழு தலைவர்கள் கனகராஜ், ராஜா, வட்டாட்சியர் மோகன் ராஜ் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் சீர்காழி**

முரளியன், த/பெ.ராமகிருஷ்ணன்,
12வது தெரு,
அறிஞர் அண்ணாநகர், நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
சீர்காழி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "ராமகிருஷ்ணன்" த/பெ. ராமசந்திரன் என்பவர் இறப்பு சான்று வேண்டல். மேற்படி 23.அளக்குடி கிராமம், சீர்காழி வட்டம், மயிலாடுதுறை மாவட்டம் விலாசத்தில் கடந்த 19.01.2010 மேற்படி விலாசத்தில் பதிவு செய்யகோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாசியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருகேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம்.

முரளியன், மனுதாரர்,
மயிலாடுதுறை மாவட்டம்.

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதி மன்றம், வருவாய் கோட்டாட்சியர்,
வேதாரண்யம்,
ந.க.எண் 2740/2025/அ6
ந.க.எண்1340/2025/ஆ2(இ.4401)

ரஹ்மத்நிஸா, க/பெ.சாகுல்ஹமீது
தேத்தாக்குடி தெற்கு கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ரஹ்மத்நிஸா தனது மாமனார் ஷேக்அப்துல்காதர் த/பெ. முகைதீன் பிச்சை என்பவர் தோப்புத்துறை கிராமத்தில் கடந்த 25.05.1995-ம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: ரஹ்மத்நிஸா,
க/பெ.சாகுல்ஹமீது,
தேத்தாக்குடி தெற்கு கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அரியலூர் போக்குவரத்து பணிமனையில் பொங்கல் விழா

## அமைச்சர் தலைமையில் நடைபெற்றது



**அரியலூர்,ஜன.13-**

அரியலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் திருச்சி மண்டலம் சார்பில் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமை வகித்து, தொடங்கி வைத்தார். தொடர்ந்து, பணியாளர்கள் அனைவருக்கும் புத்தாடைகள் மற்றும் பொங்கலை வழங்கினார். நிகழ்ச்சியில் திருச்சி மண்டல பொது மேலாளர் டி.சதீஷ்குமார், துணை மேலாளர்கள் புகழேந்திராஜ், ராஜேந்திரன், கிளை மேலாளர் குணசேகர் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள், அனைத்து தொழிற் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டி



**கந்தர்வகோட்டை,ஜன.13-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு கபடி, கிரிக்கெட் உள்ளிட்ட போட்டிகள் 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படட்டது.இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தரவ கோட்டை ஒன்றிய செயலாளரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும்பொழுது

இளைஞர்கள் நாட்டின் நம்பிக்கை, எதிர்கால தூண்கள்; அவர்களுக்கு அளப்பரிய ஆற்றலும், துணிவும் உண்டு.

சமூக மாற்றம், வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு அவசியம், சரியான வழிகாட்டுதல், கல்வி, திறன் மேம்பாடு மூலம் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் . இளைஞர்கள் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று பேசினார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரியைகள் மணிமேகலை, சிந்தியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விவேகானந்தர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு அரசு மதுபான கடைகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் இந்து மக்கள் கட்சி கோரிக்கை



**திருவாரூர்,ஜன.13-**

சுவாமி விவேகானந்தரின் 61வது ஜெயந்தி விழா நேற்று நாடு முழுவதும் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்பட்டது. இளைஞர்களை நல்வழிப்படுத்தும் வகையில் வருடந்தோறும் ஜனவரி 12ம் தேதி ஒரு நாள் அரசு மதுபான கடைகளுக்கு விடுமுறை அளிக்க தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் அரசாணை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை மனுவினை இந்து மக்கள் கட்சியினர் திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று வழங்கினர்.தமிழகத்தில் மிலாடி நபி, குடியரசு தினம்,சுதந்திர தினம்,திருவள்ளுவர் தினம்,மகாவீர ஜெயந்தி, வள்ளலார் தினம்,தொழிலாளர் தினம் போன்ற தினங்களுக்கு மதுபானம் கடைக்கு விடுமுறை அளித்து கௌரவித்து வருகிறது.உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை எடுத்துரைத்த சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழா தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு மதுக்கடைகளுக்கு விடுமுறை அளித்து தமிழக அரசு சுவாமி விவேகானந்தரை கௌரவிக்க வேண்டும்.இந்து மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ராஜசேகர் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் சீனிவாசன்,நகரத் தலைவர் விக்னேஷ்,நகர பொறுப்பாளர்கள் தியாகு,வைத்தியநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குன்னம் கிராமத்தில் இலவச பொது மருத்துவ முகாம்

**குன்னம்,ஜன.13-**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் கிராமத்தில் அருண் மருத்துவமனைசார்பில் இலவச பொது மருத்துவ முகாம் டாக்டர் கொளஞ்சிநாதன் தலைமையில் நடைப்பெற்றது. குன்னம் கிராமத்தை சுற்றியுள்ள அந்துார், கல்லம் புதுார், மூங்கிள்பாடி, கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். பொது மருத்துவ முகாமில் சர்க்கரை நோய்க்கான பரிசோதனைகள் செய்யப்பட்டன. முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு மருத்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும் காய்ச்சல் இருமல் சளியால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அனைவருக்கும் இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. 10 நபர்களுக்கு வாக்கிங் ஸ்டிக் வழங்கபட்டது

தமிழ்நாடு அரசு
**அரும்பாவூர் பேரூராட்சி**
பெரம்பலூர் மாவட்டம்

ந.க.எண்: 619/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 09.01.2026

அரும்பாவூர் பேரூராட்சியில் [illegible]

| வ. எண். | பணியின் பெயர் | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| 1. | Providing BT Road at Ramalinga Nagar East to West Street, Gogul Nagar East to West Street, Poonga Nagar South to North 1st Cross, Annai Nagar South to North 1st Street, APR Nagar 1st Cross East to West, APR Nagar 2nd Cross South to North, Thaluthalai Road PHC Road, MBC colony 2nd Street South to North, MBC Colony 4th Street South to North, MRC Nagar 1st Cross South to North, MRC Nagar 2nd Cross South to North, Vallalar Street East in Arumbavur Town Panchayat. | 96.00 | 96,000.00 | 3 மாதங்கள் |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 09.01.2026 [illegible] http://tntenders.gov.in/ [illegible] செய்து கொள்ளலாம். 2. மேலே கண்ட [illegible] 3.00 மணிக்குள் இணையதளம் [illegible] தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்/–) திருமதி. ர. வள்ளியம்மை,
தலைவர், அரும்பாவூர் பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.

(ஒம்/–) [illegible]
செயல் அலுவலர், அரும்பாவூர் பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.

